REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

32,000 பஞ்சாலை தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம்

கான்பூர், மே 2—

இங்குள்ள பஞ்சாலைகள் சிலவற்றில் அமல் செய்யப்பட்டுள்ள தொழிற் சிக்கனச் சீரமைப்புத் திட்டங்களை எதிர்த்து கான்பூர் ஆலைகளில் பணிபுரியும் 46 000 தொழிலாளர்களில் 32,000 பேருக்கும் அதிகமானவர்களே பொது வேலைநிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

மலர் 2] சென்னை: சித்திரை 20உ செவ்வாய் (3—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 21உ புதன் (4—5—55) [இதழ் 275

'புரட்சி மனம்கொண்ட தொழிலாளர் உருவாக'

'சரித்திர போதனையால் சுதந்திர உணர்வு கூடுகிறது'

'அதை தடுக்க ஆங்கிலப் பள்ளிகளை மூடுவதே சிறந்த ஏற்பாடு'

கோவா சட்டசபை உறுப்பினர் கருத்தும் — அரசாங்கப் போக்கும்!

இந்திய வரலாறும், நிலநூலும் ஆங்கிலப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருவதின் விளைவாகவே, கோவாவில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டுத் தீவிரமாகிறதாக கோவா சட்டசபை உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

இக்கருத்துடைய அவ்வுறுப்பினர்கள், ஆங்கிலப் பள்ளிகளில் கல்வி கற்கச் சேரும் மாணவர்களின் தொகை பெருகுவது கண்டு அஞ்சுகின்றனர்.

அப்பள்ளிகளுக்கும் அவைகளில் பயிலும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தடைகள் விதிக்கப்பட்டிருந்தபோதிலும்கூட, 10,000 மாணவர்களுக்கு மேல் அங்கு கல்வி பயின்று வருகின்றனர். இதன் பலனாக, மூன்று முக்கியமான போர்ச்சுகீசிய கல்லூரிகளுக்கு அரசாங்கம் மூடுவிழா செய்திருக்கிறது.

'விவசாய நாடு தொழில்மயமாக வேண்டும்'

'பாலைவனமாக்கப்படும் திராவிடத்தில் தொழிலாளர் புரட்சியை ஆக்க முடியுமா?'

புதுவையில் கல்விச் சீர்திருத்தங்கள்

சென்னை, மே 2—

"புதுவை, காரைக்கால், முதலிய முன்னாள் பிரெஞ்சிந்தியத் திட்டுக்களின் சட்டபூர்வமான அதிகாரமாற்றம் ஏற்பட்டான பிறகு, கல்வி சீர்திருத்தங்களை அமுல் செய்வதற்கான திட்டங்கள் துரிதமாக தயாரிக்கப்பட்டு வருகின்றன," என்று புதுவை பிரதம அதிகாரி கேவல் சிங் குறிப்பிட்டிருக்கிறார்.

மார்பில் புற்று நோய் ஏற்பட்டிருக்கும் நோயாளிகள் பிழைக்க அணுக் கதிரியக்கமுள்ள பாஸ்பரஸ் நன்கு பயன்படும் என கலிபோர்னிய சர்வகலாசாலையின் இரு விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

துறையூர் மேதின விழாப் பொதுக்கூட்டத்தில் காஞ்சி-கல்யாணசுந்தரம்

"உடலுழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து என்றென்றும் பாடுபட்டு உழைத்து வருபவர் திராவிட இன மக்களேயாவர். உடலுழைப்பை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் பெரும்பான்மையினரான திராவிட இனமக்களை பாட்டாளி மக்களாகக் கொள்ளாது வேறு எவ்வாறு கொள்வது? பாட்டாளிக்கு உரித்தானவை எனக்கூறப்படும் இலட்சணங்கள் அனைத்தும், பெரும்பான்மையான திராவிட இனமக்களிடை அமைந்துள்ளன. எனவே, பாட்டாளி மக்களின் விழாவான மேதின விழாவை, திராவிட இனத்தின் அரசியல், பொருளியல், மதவியல், சமூகவியல் ஆகியவற்றின் விடுதலை ஒன்றையே குறியாகக்கொண்டு தீவிரப் பணியாற்றி வரும் நமது தி. மு. கழகம் கொண்டாடுவதில் எவரும் வியப்புறத் தேவை இல்லை—பொருந்தாப் போக்கும் ஒன்றுமில்லை."

—இவ்வாறு, தோழர் என். கே. பாலசுந்தரம் தலைமையில், துறையூர் நகர தி. மு. கழகச் சார்பில், 1—5—55 ஞாயிறன்று நடைபெற்ற மேதின விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தோழர் காஞ்சி. கல்யாணசுந்தரம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பெரும் புரட்சிக்கு முன்னணிப் படையினராக இருப்பவர் தொழிலாளி வர்க்கத்தினர் எனக் கூறப்படும் கருத்து உண்மையானது என ஒப்புக்கொள்ளப்படுவதானால், அத்தகு புரட்சி ஆர்வம் பெற்றுள்ள தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்க வேண்டியதும் முதற்கண் தேவைப்படும் ஒன்று என்பது விளக்கமாகிறது.

"விவசாயத்தையே கட்டி அழட்டுமென வேண்டுமென்றே இந்தியப் பேரரசால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் திராவிடத்தை, நவீன தொழில் வளமுள்ளதாக மாற்றியமைக்காத வரையில், புரட்சிக் குணம் படைத்த தொழிலாளர் வர்க்கத்தையும் தோற்றுவிக்க ஒரு நாளும் முடியவே முடியாது. மேற்படி நோக்கில் அசையா நம்பிக்கையுடையோர், தொழில் துறையில் திராவிடம் பாலைவனமாக இந்தியப் பேரரசால் ஆக்கப்பட்டிருப்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் திராவிட நாடு விடுபட வேண்டியதின் அவ

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசனங்கள் வீடுகளுக்குள் நுழையாது ஜாதி இந்துக்கள் தடுக்கப்பட்டனர்

ஆந்திரகிராமத்தில் அதிசயநிகழ்ச்சி

அனந்தப்பூர், மே. 3—

உயர் ஜாதியினர் எனப்படும் ஜாதி இந்துக்கள் தங்கள் வீட்டில் நுழைவதை, அரிசனங்கள் அனுமதிக்க மறுத்து விட்டனர் என்று தெரிகிறது.

ஆந்திரப் பகுதியான மலையவர் தம் கிராமத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

கிராம முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அங்கே 'அரிசன நாள்' கொண்டாடப்பட்டதாம்.

மேலே கூறிய நிகழ்ச்சி நடைபெறு முன்னர், மாவட்ட அதிகாரி கொண்டல ராவ், சட்டசபை உறுப்பினரும், அரிசன வகுப்பினருமான கே. சாந்தப்பா, அரிசன ஊழியர் ஏ. சென்னப்பா ஆகியோர், கோவில்களுக்குச் சென்று வழிபட்டனர். இவர்கள் அனைவரும் 'ஆஞ்சநேய ஸ்வாமி' கோவிலுக்குள் கோவில் மரியாதைகளுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

விழாவின் அடுத்த நிகழ்ச்சியாக ஜாதி இந்துக்கள் அரிசனங்கள் வீடுகளுக்குச் சென்று, அவைகளில் மிகவும் நாகரீகமாக வைக்கப்பட்டிருக்கும் வீடுகள் மூன்றுக்குப் பரிசு அளிக்க வேண்டி அனைவரும் புறப்பட்டனர்.

ஆனால், இவர்கள் தங்கள் வீடுகளுக்கு வரப்போகிறார்கள் என்ற செய்தியைக் கேட்ட அரிசனங்களில் பெரும்பாலானோர் தங்கள் வீடுகளைப் பூட்டிவிட்டு வயல்களுக்குச் சென்றுவிட்டனர்.

மற்றவர்கள், வீட்டின் முன்னே காவல் நின்று, உள்ளே நுழைய முயன்ற இந்துக்களைத் தடுத்தனர்

உள்ளேவிட மறுத்த அரிசனங்களைப் பார்த்து, தாங்கள் அரிசனங்களை கோவிலுக்குள் அனுமதித்துள்ளதாகவும், கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதித்திருப்பதாகவும், ஆகவே தங்களை உள்ளே அனுமதிக்குமாறும் ஜாதி இந்துக்கள் கேட்டுக்கொண்டனர்.

இதன் பின்னர், கலவரம் ஏற்படுமென்று அஞ்சிய ஜாதி இந்துக்கள் போலீசாரின் உதவியை நாடியுள்ளனர்.

ஆனால், அதிகாரிகளின் தலையீட்டிற்குப் பின்னர், அரிசனங்கள், பழக்கத்திற்கு மாறாக ஜாதி இந்துக்களை தங்கள் வீடுகளுக்குள் சென்று பார்க்க அனுமதித்தார்களாம்!

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு

அவசரப்படக்கூடியது அல்லவாம்!

அமைச்சர் தேஷ்முக் கருத்து

சர்க்காருக்குச் சொந்தமான தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க முடியுமா என்பது பற்றிய சர்ச்சையில் தான் ஈடுபட முடியாது என்று இந்திய சர்க்கார் நிதியமைச்சர் தேஷ்முக் கூறினார்

இது ஒரு பெரும் பிரச்சினையென்றும், சந்தர்ப்பம் கிட்டும் போது பாராளுமன்றம் அதை விவாதிக்க நேரிடலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில்களில்கூட தொழிலாளர்களை நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்வது என்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று தேஷ்முக் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினை அவசரத்தில் முடிவு செய்யக்கூடியது அல்லவென்றும், தான் இது பற்றிக் கொண்டுள்ள கருத்தை மாற்றிக் கொள்ளத் தயார் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தக்க ஆதாரங்களுடன் இதுபற்றி கூறினால், தாங்கள் இப்பிரச்சினை பற்றி ஆராயத் தயார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்ப்புக்கு மேல் எதிர்ப்பு

கராச்சி, மே 2—

பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமது அலி இன்னும் ஒரு வார காலத்தில் தம் முதல் மனைவிக்கு மீண்டும் பூரண அந்தஸ்து அளிக்காவிடில், கிளர்ச்சியில் ஈடுபடப் போவதாக புதியதாக நிறுவப்பட்டுள்ள பெண்கள் உரிமைச் சங்கம் இன்று அச்சுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

'நேரு அரசியல் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர்!'

'காகித வீடுபோல் காங்கிரஸ் கவிழ்ந்துவிடும்'

'உரிமையை தலைவர்களிடம் ஒப்படைத்தோர் நிரம்பியதே காங்கிரஸ்'

பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் பட்டீல் எச்சரிக்கை

அகமதாபாத், மே, 3—

"காங்கிரசை ஜனநாயகப் பண்புள்ள கட்சியாக்க உடனே அவசரமாக ஏதாவது செய்தாக வேண்டும்; இல்லையேல் பண்டித நேரு அரசியல் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றவுடன், காங்கிரஸ் கட்சி அட்டைத் துண்டுகளால் கட்டப்பட்ட வீடுபோல் கீழே சாய்ந்து விடும்,"

—என்று, பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் இந்தியாவெங்கிலும் உள்ள காங்கிரஸ்காரர்களை எச்சரித்திருக்கிறார்

"உரிமையை ஒப்படைத்த ஜனநாயகமாக காங்கிரஸ் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது; இந்த நிலைமை நீடிக்காது, முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது," என்று அவர் மேலும் கூறினார்.

ஷோலப்பூர் தாலுகா காங்கிரஸ் தோழர்களிடை பேசுகையிலேயே பட்டீல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:—

"முதல் பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கென்று ஆறு கோடி வாக்காளர்கள் வாக்களித்தனர்; ஆனால், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை ஒரு கோடியிலிருந்து 60 லட்சமாகக் குறைந்துவிட்டது.

"புதிய திட்டம், புதிய இரத்தமுடைய இளைஞர்கள் பெருவாரியான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டம் மக்களை இழுக்கும் வகையில் வேண்டும்; இவைதான் கட்சிக்கு இப்போது தேவையானவையாகும்.

"காந்தி, பட்டேல், நேரு இவர்கள் பெயர்கள் கொடுக்கும் ஒளியின் மீது நம்பிக்கை வைத்திருப்பதை காங்கிரஸ் கட்சி கைவிடும் நேரம் வந்துவிட்டது. காங்கிரஸ் தனது பெரிதும், மதிப்பிலும் நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கல்லூரிகளிலிருந்து இளைஞர்கள், இளம் பெண்கள் காங்கிரசுக்கு வருமாறு அவர்கள் உள்ளங்களை நம் பக்கம் இருக்க வேண்டும். திறமையுள்ளவர்கள் காங்கிரசுக்கு அழைத்துவரப்பட வேண்டும்

"இப்படிச் செய்யாவிட்டால் உரிமையை தலைவர்கள் என்போரிடம் ஒப்படைத்துவிட்டு நிற்கும் மக்களின் ஒளியினால் மட்டுமல்ல, 'ஆமாம்சாமி'களான எந்தவிதமான சொந்த விருப்பமோ இல்லாதவர்களின் கூட்டமாகத் காங்கிரஸ் இருந்துவரும்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—5—'55 செவ்வாய்

நிந்தையும் விந்தையும் !

சந்தையில் விதவிதமான பொருள்கள் குவிக்கப்படுகின்றன—விலை கூறி விற்கப்படுவதற்காக! விந்தையல்ல, அது! சிந்தை விரும்பும் பொருள்களை வாங்குவோருக்கு வசதியாக, வாழ்க்கைத் தேவைக்கான எல்லா பொருள்களும் சந்தையில் இடம் பெறுகின்றன.

ஆனல் அந்தச் சந்தையில், அடிமைகள்— மனிதர்கள்தான் 'வாணிபப் பொருளாக' விலை கூறி விற்கப்படுவது?

அப்படியொரு காலமிருந்தது—மனிதர்கள் 'மார்க்கெட்' பொருளாக விலை கூறி விற்கப்பட்ட காலம்!

அடிமைச் சந்தைகள் — 'மனித குலத்திற்கு நாகரீகம் வழங்கிய நாடுகள்' எனக் கருதப்படும் எகிப்திலும், கிரேக்கத்திலும்கூட இடம் பெற்றிருந்தனவாம்!

மனிதர்களை 'அடிமைகள்' என்றழைத்து, அவர்களை விற்பனைக்காக பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தோருங்கூட அக்காலத்தில் இருந்திருக்கின்றனர்!

'அடிமை வாணிபம்,' வேறு பல துறை வாணிபம்போலவே இலாபந் தரும் தொழிலாக இருந்திருக்கின்றது.

ஆனல், கால மாற்றம், மனிதர்களை மனிதர்களே விலைகூறி விற்கும் அவலத்தை ஒழிக்க வழி செய்யாமல் இருக்கவில்லை. என்ருலும், 'அடிமை வாணிபம்,' இன்று, உலகத்தில் ஒழிந்துவிட்டதாகக் கூற முடியாது; வேண்டுமானல், 'அடிமை வாணிபம்' வேறு உருவிலே இடம் பெற்றிருக்கத்தான் செய்கிறது என்று கூறுவது முழுவதும் தவறுடையதாகாது.

மனிதர்கள் அடிமைகளாக் கப்பட்டதற்கும், வாணிபப் பொருளானமைக்கும் காரணங்கள் பல இருந்திருக்கலாம்; அவையல்ல, நாம் இங்கு குறிப்பிட விரும்புவது!

இன்றும், உலகில், 'மனிதர்கள் எல்லோரும் ஒரே நிறையுடையோரே' என்ற எண்ணம் பரவலாக இடம் பெற்றிருக்கவில்லை; அந்த நிலை வளர்ச்சி, மிக வேகக் குறைவானதாயிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆப்பிரிக்கா — 'இருண்ட கண்டம்' என்றழைக்கப்படும் பூமி; அங்கு நீக்ரோவர்கள்—நிறத்தால் கருப்பாயும், பார்ப்பதற்குச் சற்று அழகுக் குறைவான தோற்றமுடையோராயும் இருப்பதாலேயே, அந்த நாட்டு ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் வெள்ளை இனத்தவர், அவர்களை மனிதர்களாக மதிக்க மறுத்து கொடுமை புரிந்த வண்ணமுள்ளனர்.

அந்த அநாகரிகமான போக்கு பற்றி நாம் பன்முறை கண்டித்திருக்கிறோம்.

ஆப்பிரிக்க நாட்டு ஆளவந்தார்களாயுள்ள வெள்ளை இனத்தவரின் கொடுமை புரியும் போக்கு, மனித குலத்தின் மனச்சாட்சிக்கு அறைகூவல் விடுத்தவண்ணமுள்ளது.

'ஆப்பிரிக்காதான் இருண்ட கண்டம்; அங்குதான் இக்கொடுமை,' என்றெண்ணவும் முடியவில்லை!

அமெரிக்கா—அகிலத்தையே தன் டாலர் ஒளியால் மயக்கி மடக்கிவிட எத்தனிக்கும் போக பூமி—அங்கேகூட இந்தக் கொடுமை நிலவத்தான் செய்கிறது.

சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் என்று விடுதலை முரசு கொட்டி, 'நீக்ரோவரும் மனிதரே; அவர்களும் தம்மைப் போல் வாழ்வும், வளமும் பெற்று வாழ வழி செய்ய வேண்டும்,' என்று உரிமைச் சாசனம் தீட்டிய ஆப்ரகாம் லிங்கன் தோன்றி ஆட்சிபுரிந்த நாடு அமெரிக்காதான்!

'கலை'கள் அங்கே செழிக்கிறது; கலாச்சாரம் தழைக்கிறது; 'அமெரிக்க நாகரீகம், ஓங்கி வளர்ந்த ஒன்று,' என்றெல்லாம் தம்பட்டமடிக்கப் படுகிறது — அமெரிக்காவைப் பற்றி! ஆனல்...?

"நீக்ரோவர்களை அனுமதிக்க மறுத்த சினிமா காட்சிசாலை முன், பல நீக்ரோவர்கள் அறப்போர் புரிந்தனர்; போலீசார் வந்து அமைதி காத்தனர்."

நேற்று வெளிவருகிறது ஒரு செய்தி;

"நீக்ரோவக் குழந்தைகளுடன் ஒன்ருகக் கல்வி பயில மறுத்து, நூற்றுக்கணக்கான வெள்ளையர் குழந்தைகள், பள்ளிகளை விட்டு வெளியேறினர்; அமெரிக்கத் தலைநகரிலேயே பரபரப்பு நீடிக்கிறது."

சின்னட்களுக்கு முன்பு இப்படிச் செய்திகள் வெளிவந்தன.

ஆப்பிரிக்கா இருண்ட பூமி; அங்குதான் இந்த மனிதனை மனிதர் ஒதுக்கி வைக்கும் அவலம்!

ஆனல், அமெரிக்கா, ஆபிரகாம் லிங்கன் தோன்றிய பூமியாயிற்றே?

அமெரிக்கா— உலகத்தையே விலை பேசுமளவு வளர்ந்திருக்கலாம்; வளம் பெற்றிருக்கலாம் —செல்வத்தால்!

அமெரிக்க மக்கள், நவீனமான உடை அலங்காரமும், நவ நாகரீகமான வாழ்க்கை வசதிகளும் பெற்றிருக்கலாம்; ஆனல், 'மனிதர் எல்லோரும் சமமே' என்றெண்ணும் மன வளம் பெற்றிருக்கிருர்களா என்பதற்கு, மேற்கண்ட செய்திகள் பதில் தரும்.

ஆப்பிரிக்காவில், மனிதாபிமான நிந்தை!

அமெரிக்காவில், ஆப்ரகாம் லிங்கன் கேலி பேசப்படும் விந்தை!

குழந்தைகள் நிதிக்கு 23 நாடுகள் நன்கொடை

ஐ. நா. குழந்தைகள் அவசர நிதி நிறுவனம், இவ்வாண்டின் திட்டங்களுக்காக 23 நாடுகளிலிருந்து 63,60,000 டாலர்கள் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

காதால் கேட்டவை...

"திருமணங்கள் வானுலகில் நடப்பதாகக் கூறுகிருர்கள்; வானுலகில் திருமண கழகம் ஒன்று உண்டா? அப்படியானல் அதன் முகவரி எனக்குத் தேவை."

"நான் மணம் செய்துகொள்ளாதவனுகையால் திருமணம் பற்றி பாரபட்சமில்லாத கருத்தறிவிக்க முடியும்."

"சாட்டர்ஜியும், தேஷ்பாண்டேயும் அதிகாரத்திலிருந்தால், பெண்களுக்குக் கிடைக்கும் முதல் அடிப்படை உரிமை, அவர்கள் தங்கள் கணவன்மார் இறக்கும்போது அவர்களுடன் உடன்கட்டை ஏறுவதாகத்தான் இருக்கும்."

"சாட்டர்ஜி அதிகாரத்திலிருந்தால், பசு ஒரு தெய்வீகமான உயிராகக் கருதப்பட்டு வணங்கப்படும். வேறு எல்லா 'தெய்வங்களை'ப் போலவே பசுக்களுக்கும், உணவோ புல்லோ தேவையிருக்காது."

"ஒரு கணவன் தன்னுடைய கால் பெருவிரலிலிருந்த நகத்தை வெட்டிக் கொள்ளாமலிருந்தது, அவன் மனைவி அவனிடமிருந்து மணவிலக்கு கோருவதற்கு நியாயமான காரணம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டது—ஒரு முறை அமெரிக்காவில்,"

இவ்வாறு பி. எச். கார்டேகார் மக்கள் சபையில் நடைபெற்ற திருமண மசோதா விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கருத்தறிவித்ததாகக் கூறப்படுகிறது.

"டாக்டர் அம்பேத்கார் நவீன கால மனு; படாஸ்கர் நவீனகால ஜக்ய பால்கா."

"இந்து சட்டம் பற்றி படாஸ்கர் ஒரு பரீட்சை எழுதி இருந்தால், அவர் நிச்சயம் பரீட்சையில் 'கோட்' அடித்திருப்பார்."

இவ்வாறு எ சி. சாட்டர்ஜி குறிப்பிட்டாராம்!

பத்திரிகை ஆசிரியர் உண்ணுவிரதம்

சவந்தவாடி, மே 1—

மராத்தி இதழான 'விசார்' ஆசிரியர் பீடித் தொழிலாளரின் கோரிக்கைகளை ஆதரித்து உண்ணுவிரதம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளாரெனத் தெரிகிறது.

தென் இரத்தினகிரி பீடித் தொழிலாளர் கழகத்தின் கோரிக்கைகளை பம்பாய் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், சவந்தவாடியில் உள்ள பீடித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டதால் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட துயரைப் போக்க பம்பாய் அரசாங்கம் முன்வந்து உறுதியளிக்கும் வரை பத்திரிகாசிரியர் உண்ணுவிரதம் இருக்கப்போவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

1,000 பீடிகளுக்கு ரூ. 1-7-0 என்று கூலியை உயர்த்த ஒப்புக்கொள்ளாத முதலாளிகள் திடீரென்று தங்கள் தொழிற்சாலைகளை மூடிவிட்டனராம்; இதனல் சுமார் 10,000 பீடித் தொழிலாளர்கள் வேலையின்றி வேதனை அடைந்து வருகின்றனராம்.

மீண்டும் ஒத்திவைப்பு

உத்தேசிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அரசியல் நிர்ணயக் குழுத் தேர்தலுக்கான அபேட்சைகள் பெறுவது, தேர்தல் நடத்துவது, அரசியல் நிர்ணய சபைக் குழுவைக் கூட்டுவது ஆகியவைகளை யெல்லாம் எவ்விதக் காலவரையறையுமில்லாமல் ஒத்திப் போட்டு பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் உத்திரவிட்டுள்ளார்.

இத்துடன், 5 நாட்களுக்குள் இரண்டாவது தடவையாக அரசியல் நிர்ணய சபைக் குழுவின் தேர்தல் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

அபிவிருத்தித் திட்டங்கள்

சென்னை செய்துள்ள செலவுகள்

1954—55-ம் ஆண்டில் சென்னை மாநில சர்க்கார், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவழித்துள்ள மொத்தத் தொகை ரூ. 58 லட்சம்.

அதற்கு முந்திய ஆண்டில் இத்திட்டத்திற்காக மத்திய சர்க்கார் மானியமாக அளித்த தொகை ரூ. 40 லட்சம்; ஆனல், அத்தொகையில், அவ்வாண்டில், ரூ. 3 லட்சம் மட்டுமே செலவு செய்யப்பட்டது.

1954—55-ல், மானியமாகத் தரப்பட்டுள்ள தொகை ரூ 59.4 லட்சம்; இதில் பாதித் தொகையான 50 சதவிகிதம் கிராமக் குடிதண்ணீர் வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிராமக் குடிதண்ணீர் வேலைகள் நீங்கலாக, கிராமப் பாதைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், ஏற்கனவே உள்ள பள்ளிகளையும் மருத்துவ மனைகளையும் அபிவிருத்தி செய்தல் போன்ற வேலைகளும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன

முதன் முதலில் இவ்வேலைகளுக்காகத் தரப்பட்ட மானியத் தொகை ரூ. 29.70 லட்சம்—மாவட்டவாரியான தேவைக்கு ஏற்றபடி ரூ 48.46 லட்சமாக உயர்த்தப்பட்டது.

இத்தொகையில் திட்டமிடப்பட்ட மொத்த வேலைகள் 2841-ல், 358 வேலைகள் முடிவடைந்துவிட்டன; தற்போது 2,058 வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இன்னும் மேற்கொள்ளப்படாமலிருக்கும் வேலைகள் 425 ஆகும்.

கிராமப் பாதைகள்

கிராமப் பாதைகள் போடும் வேலையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கோவை, வட ஆற்காடு, சேலம் ஆகிய 3 மாவட்டங்களில் மட்டும் சுமார் ரூ. 9 லட்சம் செலவில் 2,35,196 கல் தொலைவிற்குக் கிராமப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன.

கிராமக் குடிதண்ணீர் வினியோகம்

இத்திட்டத்திற்காக சென்னை மாநில சர்க்காருக்குக் கிடைத்துள்ள மொத்த மானியத் தொகை ரூ. 29.70 லட்சம். இத்திட்டத்தின் கீழ், உயர்மட்ட தண்ணீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல், குழாய் போடுதல் போன்ற 453 பெரிய வேலைகள் உட்பட 2,515 வேலைகள் சென்ற மார்ச்சுத் திங்களுக்குள் முடிக்கப்பட திட்டமிடப்பட்டிருந்தனவற்றுள், 224 வேலைகள் முடிவு பெற்றுள்ளன. தற்போது தொடர்ந்து 1735 வேலைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் மேற்கொள்ளப்படாமல் இருக்கும் வேலைகள் மொத்தம் 502; மீதியிருக்கும் வேலைகள் அனைத்தும் கைவிடப்பட்டன. இவையனைத்திற்குமாக மத்திய சர்க்காரின் மானியத் தொகையாகக் கிடைத்த ரூபாய் 19.02 லட்சம். மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் 400 வேலைகள், 1½ லட்ச ரூபாய் செலவில் அரிசனர்கள் நலனுக்காகவே செய்யப்பட்டவை ஆகும்.

கிராமக் குடிதண்ணீர் வினியோகத்திற்கு மாநில சர்க்கார் ரூ 39.64 லட்சம் ஒதுக்கியது. மொத்தம் 5,490 வேலைகளில் 1,189 வேலைகள் முடிவுபெற்றுள்ளன. இன்னும் 2,275 வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றுள் ரூ 7.4 லட்சம் செலவில் 1,042 வேலைகள் அரிசன மக்களின் நன்மைக்காகச் செய்யப்பட்டவை.

ரூ 50 லட்சம் செலவில் 2,500 கிணறுகளைத் தோண்டுவது சாத்தியமே. ஒரு சேரிக்கு ஒரு கிணறு வீதம் தோண்டுவதின் மூலம், அரிசனங்களுக்கென 1,379 கிணறுகள் தோண்டப்படும்.

தேசியத்தண்ணீர் வினியோக சுகாதாரத் திட்டம்:

தஞ்சாவூர், தென்னுற்காடு, நெல்லை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இத்திட்டத்தை அமுல் செய்வதற்கான பூர்வாங்கத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கான மத்திய சர்க்காரின் மானியத் தொகை ரூ 60 லட்சமாகும்.

மேற்கண்ட இத்தகவல்களையெல்லாம் சென்னை மாநில அபிவிருத்திக் கமிஷனர் திரு சத்தியநாதன் வெளியிட்டிருக்கிருர்.

ஆயிரம் மாணவர்கள் சாலை அமைக்கின்றனர்

தங்கபத்திரா பகுதிக்கு நான்கு புறங்களிலிருந்தும் செல்லும் சாலைகளை பாரத் சேவக் சமாஜத்தைச் சேர்ந்த தொண்டர்கள் ஆயிரம் பேர் துவங்கினர்.

மண் வெட்டிகள், மற்றும் பல கருவிகளுடன் தொண்டர்கள் வேலை துவங்கியுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை ஐதராபாத் முதலமைச்சர் பி. ராமகிருஷ்ண ராவ் ஆரம்பித்து வைத்தார். வதர்கத்தி என்னும் கிராமத்தில் இந்த வேலை நடைபெறுகிறது. இப்பணியில் ஈடுபட்டிருப்போர் ஐதராபாத் மாநிலத்தின் பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களாவர். இவர்கள் நான்கு வாரகாலம் இங்கே தங்கி கிராம மக்களுடன் சேர்ந்து உழைப்பர் என்று தெரிகிறது.

தாமோதர் பள்ளத்தாக்கு தி[illegible]

பிகார், மேற்கு வங்க[illegible] மாநிலங்களிடை தகராறு;

பாட்ன, மே 1—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட கார்ப்பொரேஷனுக்கு 1955—56-ம் ஆண்டுச் செலவுக்கென கோரப்பட்ட ரூ. 18 கோடியை இன்று பீகார் மாநில சட்டசபை அங்கீகரித்தது.

மேலும் அந்த கார்ப்பொரேஷனின் 1951—52-ம் ஆண்டுக்கான அறிக்கையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது

'கார்ப்பொரேஷன்', அவ்வப்போது அதன் தலைநகரை கல்கத்தாவிலிருந்து ராஞ்சிக்கு மாற்றுவதாக மாநில சர்க்காருக்குத் தந்த உறுதி மொழிகளை நிறைவேற்ருமல் இருப்பதைக் கண்டிக்கும் திருத்தத்தினையும் சபை நிறைவேற்றியிருக்கிறது.

மேலும் அந்த கார்ப்பொரேஷனில் பணிபுரிவதற்கு ஆட்களெடுப்பதில் உள்ளூர் நபர்களுக்கு நியாயமான அளவு எண்ணிக்கை வேலை தரவேண்டும் என்றும் சபை திருத்தம் கொண்டுவந்துள்ளது.

விவாதத்திற்கு பதிலளித்த நீர்ப்பாசன இலாகா மந்திரி, கார்ப்பொரேஷன், ராஞ்சிக்கு தனது தலைநகரை மாற்ருமலிருப்பதற்கு இரு காரணங்களிருக்கலாம் என்றும், வங்க அரசாங்கத்திற்கு கார்ப்பொரேஷன் அஞ்சுகிறதோ என்னவோ? இரண்டாவதாக, கல்கத்தாவில் கிடைக்கும் நவீன வசதிகள் ராஞ்சியில் கிடைக்கவில்லை என்பதுமிருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிருர். அவர் மேலும், 'அப்படியிருப்பினும் இனியும் நாம் இதை அனுமதிக்க முடியாது; அடுத்து இரு மாநிலங்களும் கூடி மாநாட்டின்போது இதுபற்றிப்பேசலாம். அந்தக் கார்ப்பொரேஷனில் 5079 பேர் வேலை செய்கிருர்கள். அவர்களில் 1406 பேர் மட்டுமே பீகாரிகள். இதரர் எல்லோரும் வங்காளிகள். அந்த 1406 பேரில் கூட பெரும் பகுதியினர் கீழ்த்தர சிப்பந்திகளாயுள்ளனர். தொழிற் பயிற்சி பெற்றவர்கள், போதுமான அளவு, இங்கு இல்லை" என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

ஆமணக்கு வித்து உற்பத்தி 1953—54ல் இருந்ததைக் காட்டிலும், 1954—55ல், 4000 டன் அதிகரித்திருக்கிறது.

மே தின விழாவில் பண்டித நேரு

ரஷ்யப் புரட்சி பற்றி குறிப்பு

"ரஷ்ய முறை பலாத்காரப் புரட்சி முறையாகும்; பல லட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்ட பின்னர்தான் ரஷ்யாவில் புதிய சர்க்கார் தோன்றிற்று. ரஷ்யப் புரட்சியின் காரணமாக மக்களுக்கேற்பட்ட தொல்லைகளையும், துயர்களையும் நாம் மறக்க முடியாது.

"ரஷ்யாவைப் பின்பற்றி நாமும் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டால், பிறநாடுகள் அதை தங்களுக்குச் சாதகமாக்கி நம்மை அடிமை கொண்டுவிடுவார்கள்.

"அகிம்சை முறையால் நாம் பெரிய ஒரு ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்தோம்; மகாராஜாக்களின் ஆட்சிமுறையை அகற்றினோம்; ஜமீன் தாரி முறையை மாற்றினோம்; அதே முறையைப் பின்பற்றி ஏழ்மையையும் ஒழிப்போம்.

"எப்போதுமே, நமது முன்னேற்றத்திற்கு அயல்நாடுகளை நம்பிக்கிடப்பது மிக ஆபத்தான ஒன்றாகும்."

இவ்வாறு இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் புதுடில்லியில் நடைபெற்ற மாபெரும் மே தின அணிவகுப்பில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் கூறினார்:—

"மாறுபட்ட நல உரிமைகள் காரணமாக வர்க்கப் போராட்டம் இருந்து வருவது உண்மையே ஆகும்; ஆனால் பலாத்காரத்தாலோ, அல்லது, கதவடைப்புகள், வேலை நிறுத்தம் என்பவைகளாலோ அல்லாமல், ஏற்படுகின்ற மோதுதல்களையெல்லாம், சுமூகமான பேச்சுவார்த்தைகள் நடத்தி, அமைதியான முறையில் தீர்க்க வேண்டுமென்பதே பிரச்சினை."

இவ்வாறு குறிப்பிட்ட நேரு பண்டிதர், மேலும் சோஷலிச மாதிரியில் சமுதாய அமைப்பு இலட்சியத்தையும் அமைதியான முறையிலேயே அடைய வேண்டுமென்றும், இந்த இலட்சியத்தை இரத்தக்களறியின்றி அடைய முடியாதென்று யாராவது கூறினால் அதை ஒப்புக்கொள்ள முடியாது என்றும்; அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் அடுத்த 10 அல்லது 20 ஆண்டுகளுக்குள் இந்தியா முழுமையும் நசிந்து விடுமென்றும் கூறினார்.

★

அணிவகுப்பில் கோரிக்கை!

புதுடில்லி, ஏப் 1—

புதுடில்லியில், இன்று, இந்திய தேசிய தொழிலாளர் சங்க ஆதரவில் நடைபெற்ற மே தின அணிவகுப்பில், தொழிலாளிக்குக் குறைந்த பட்ச சம்பளம் ரூ 100 நிர்ணயிக்க வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அவசரமில்லையாம்!

"சென்ற 1952-ல், கும்பகோணத்திலிருந்து விருத்தாசலத்திற்கு இருப்புப் பாதை போடவேண்டுமென்று கோரி மனு ஒன்று வந்தது; அதுபற்றி சென்னை சர்க்காரின் கருத்தைக் கேட்டபோது, அவசரமாக முதலில் போடவேண்டிய பாதைகளைப் போட்டு முடித்தான பிறகு இதைப் பார்த்துக் கொள்ளலாமென்று பதில் வந்தது," என்று டெல்லி மக்கள் சபையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் இரயில்வே துணை அமைச்சர் அளகேசன் தெரிவித்திருக்கிறார்.

தேசிய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரங்களில், 1954 செப்டம்பர் வரை, 2946 முதியோர் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ரப்பர் தொழிலுக்கு சர்க்கார் உதவி

1,30,000 தொழிலாளர் எதிர்ப்பு

மலேயா சர்க்கார் ரப்பர் தொழிலுக்கு 280 மில்லியன் டாலர்கள் உதவி செய்யத் தீர்மானித்திருப்பதை மலேயா தொழிலாளர் கழகம் கண்டித்திருக்கிறது. இந்த கழகத்தில் 1,30,000 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

இப்படிச் செய்யப்படும் உதவி மிகவும் தைரியமாகச் செய்யப்படுவது என்றும், நாட்டின் பொருளாதாரத்தின் மீது சர்க்கார் நடத்தும் தாக்குதல் என்றும் தொழிலாளர் கழகம் எடுத்துக்காட்டியுள்ளது.

பள்ளிகள் கட்டவும், மருத்துவமனைகள் அமைக்கவும், வீடுகள் அமைக்கவும், சேரிகளை ஒழிக்கவும் சர்க்காரிடம் பணமில்லாதபோது இவ்வளவு பெரிய தொகையை ரப்பர் தொழிலில் செலவிடுவது சர்க்காருக்கு நியாய அடிப்படை இல்லை என்று தொழிலாளர்கள் சழகம் மேற்கொண்டு அறிவித்துள்ளது.

இனிப்பான செய்தி!

1954—55வது ஆண்டில், சர்க்கரையின் உற்பத்தி, சென்ற ஆண்டைவிட 50 சத விகிதமாக உயரக்கூடுமென மத்திய சர்க்கார் விவசாய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக் மக்கள் சபையில் கூறினார்.

மேலும், சாகுபடி நிலத்தை அதிகரிக்காமலேயே இந்த ஆண்டின் சர்க்கரை உற்பத்தி 15 லட்சம் டன்னாக இருக்குமென்றும், சென்ற ஆண்டின் மொத்த உற்பத்தி 10 லட்சம் டன்தான் என்றும் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டனிலிருந்து பருத்தி துணி இறக்குமதி

38 லட்சம் கெஜமென மக்கள் சபையில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 30—

"சென்ற ஆண்டில் (1954) பிரிட்டனிலிருந்து இந்தியாவிற்கு மொத்தம் 38 லட்சம் செஜம் பருத்தித் துணி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—13/55

உரிய கழகத் தோழர்களின் கவனத்திற்கு!

★

வட ஆற்காடு மாவட்ட (தி. மு. க.) கிளைத் தேர்தலைப் பற்றி சிலரால் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் தலைமைக் கழகத்தால் தெளிவுபடுத்திக்கொள்ளப்பட்டு வருகின்றன. போதிய அளவு விளக்கம் பெற்றவுடன், பொதுச்செயலாளர், வ. ஆ. மாவட்டக் கிளை உறுப்பினர்களைக் கூட்டி வைத்து பிரச்சினைகளை ஆய்வார். நாளும், இடமும், நேரமும் பிற்பாடு அறிக்கையின் மூலம் அறிவிப்பார். அதுவரையில் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சழகத் தோழர்கள் அமைதியோடு இருக்கக் கேட்டுக் கோள்ளப்படுகிறார்கள்.

* * *

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லை நகரக்கிளைத் தேர்தலையும், தச்சநல்லூர் சிற்றூர்க் கிளைத் தேர்தலையும் நெல்லை மாவட்டச் செயலாளர் நடத்திவைப்பார். அதற்கான முயற்சிகள் அவரால் எடுக்கப்பட்டு விவரம் அறிவிக்கப்படும்.

* * *

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேனி, காமயக்கவுண்டன் பட்டி ஆகிய ஊர்களின் கிளைத் தேர்தல்களை மதுரை மாவட்டச் செயலாளர் நடத்திவைப்பார். அதற்கான முயற்சிகள் அவரால் எடுக்கப்பட்டு தேர்தல் பற்றிய விவரம் அறிவிக்கப்படும்.

"அறிவகம்" சென்னை
2—5—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தொழிலாளர் குடியிருப்புவசதி

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டத்திற்காகச் சென்னை மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ரூ 12,46,420 மானியமாகத் தர இருக்கிறதாம். மேலும் இதே போன்ற மற்றொரு தொகையைக் கடனாகவும் தரும் என்று கூறப்படுகிறது.

சென்னையையடுத்த செம்பியத்தில் 936 ஓரறை கொண்ட வீடுகளும், எருக்கஞ்சேரியில் 450 வீடுகளும் கட்ட இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

இது தவிர, பாப்பனுப்க்கன் பாளையம் எனுமிடத்தில் 201 - ஒற்றை மாடி வீடுகள் கட்ட கோவை இலட்சுமி ஆலைக் கம்பெனிக்கு ரூ 1,35,675 மானியமாகவும், ரூ. 2,03,512 கடனாகவும் கிடைக்கும் என்று தெரிகிறது.

ம. பா. மாநில போலீசார் சம்பளம் உயருகிறது!

மத்திய பாரத் மாநில சர்க்கார், மாநிலத்திலுள்ள போலீஸ் ஊழியர்களின் ஊதிய விகிதங்களை உயர்த்தியிருக்கிறது. இதனால், சுமார் 15,000 பேர் பயனடைவர் என்றும், சர்க்காருக்கு ரூ. 25 லட்சம் செலவாகுமென்றும் கூறப்படுகிறது.

வெள்ளை மனங் கொண்ட போலீசார்

கொள்ளையனால் கொல்லப்பட்டனர்

ஐதராபாத், மே 1—

கொள்ளைக்காரன் ஒருவனால் ஏமாற்றப்பட்டு, இரண்டு போலீசார் மரணமுற்றும், 6 போலீசார் மருத்துவமனையில் சிகிச்சை பெறவும் வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

அவுரங்கபாத்திலிருந்து 8 போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஒரு சீக்கியக் கொள்ளைக்காரனைப் பிடித்து இரயில் மார்க்கமாக அழைத்துச் செல்லுகையில், அக்கொள்ளைக்காரன் அப்போலீஸ்காரர்களுக்கு இனிப்பு மிட்டாய்கள் வழங்கினானாம்! போலீசாரும் மிட்டாயைக் கண்டதும் ஆவலாக அதனை வாங்கி வாயில் போட்டுக் கொண்டனராம். சிறிது நேரத்திற்குள் அங்கேயே இரண்டு போலீசார் இறந்துவிட்டனராம். மீதியிருந்த 6 பேரும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

கொள்ளைக்காரன் கொடுத்த அந்த மிட்டாய்களில் விஷமருந்து கலக்கப்பட்டிருந்ததே இதற்குக் காரணம் என்றும், மேற்படி கொள்ளைக்காரன் தப்பியோடிவிட்டான் என்றும் கூறப்படுகிறது.

வெறியர்கள் உணரவேண்டுமே!

இதுகாறும் வெடிக்கப்பட்டுள்ள நீர்வளிக் குண்டுகளிலிருந்து உண்டாகும் கதிரியக்கத்தின் விளைவாக, இன்னும் 10,000 ஆண்டுகளுக்குள் 10 லட்சம் குழந்தைகள் கருவிலேயே இறந்து விடுமென்று, பர்மிங்காமில் நடைபெற்ற அரசியல் கலப்பற்ற நீர்வளிக்குண்டு விளைவுகள் மாநாட்டில் பல்கலைக் கழக அணு பௌதீகப் பேராசிரியர் ஒருவர் கூறினார்.

அணுகுண்டு சோதனை

பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

சென்ற ஆண்டில் அமெரிக்கா அணுகுண்டு சோதனை நடத்தியதால் காயமடைந்தோருக்கும், பாதிக்கப்பட்டோருக்கும் ஜப்பானிய சர்க்கார் 720 மில்லியன் என்' நஷ்டஈடு தரக்கூடுமாம்.

ஜப்பான் விஞ்ஞானிகள் கருத்து வேற்றுமை?

ஜப்பானில் அணுசக்தி திட்டங்களை நிறுவ வேண்டிய யூரேனியம் அளிக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருந்தது; அணுசக்தி சம்மந்தமாக அமெரிக்க சட்டங்களைத்தான் ஜப்பான் பின்பற்ற வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்பட்டது.

'அவ்வாறு, அமெரிக்கச் சட்டம் ஒன்றின்படி, ஆராய்ச்சிகளின் இரகசியங்களை வெளியிடக் கூடாது என்பதற்குட்பட்டு அமெரிக்க உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை,' என்பது பெரும்பாலான ஜப்பானிய விஞ்ஞானிகளின் சருத்தாம்; மற்றும் சில விஞ்ஞானிகள் மேற்படி நிபந்தனைக்குட்பட்டு அமெரிக்காவின் உதவியைப் பெறலாம் என்றே கருதுகின்றனராம்.

கொலை புரிபவரினும் கொடியோர்!

கல்கத்தா, ஏப். 30—

"கொலைக் குற்றத்திற்குச் சமமான ஒரு குற்றத்தைச் செய்தார்கள்' என்று கூறி, வங்க மாகில மாஜிஸ்திரேட், இரு நெய் வியாபாரிகளுக்குத் தலா இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

உயர்ந்த அளவில் கலப்படம் செய்யப்பட்டிருந்த நெய்யை சர்க்காரின் டிரேட் மார்க்கான 'அக் மார்க்' என்று கள்ள லேபிள் கொடுத்து பொது மக்களிடையே விற்பனை செய்ததாக இங்குள்ள இரண்டு வியாபாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, இம்மாதிரியான வழக்குகளில் கடுமையான தண்டனை வழங்கவேண்டும் என, தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஒரு மனிதன் உயிரை வாங்குவதில் கொலைகாரர்களுக்குக் கூட சில காரணங்கள் இருக்கலாம்; ஆனால் எதிரிகளைப் போன்ற கொள்ளை இலாபக்காரர்கள் பிறரின் இரத்தத்தை உறிஞ்சுபவர்கள் — வேண்டுமென்றே திட்டமிட்டு மனிதரை வதைப்பவர்களாவர். இந்த வியாபாரிகளால் இழைக்கப்பட்ட குற்றங்கள் சமுதாய விரோதமானவை. அந்த எதிரிகள் உண்மையிலேயே கொலைகாரர்களைவிட படுமோசமானவர்கள்,"

என்று அந்த நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர்களை சோதனையிட்ட போது 17 டின்கள் கலப்பட நெய்யும், சுமார் 300 'அக் மார்க்' கள்ள லேபில்களும் கைப்பற்றப்பட்டனவாம். நெய்யைப் பரிசோதனை செய்து பார்த்தபோது, அது பெருவாரியான அளவிற்குக் கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாம்!

பழி வாங்கும் படலமா?

காபூலில் பாகிஸ்தான் தூதுவராலயத்தில் பறக்கவிடப்பட்டிருந்த பாகிஸ்தான் கொடி, அவமதிக்கப் பட்டதற்கு எதிர் நடவடிக்கையாக பழிவாங்கும் படலத்தில் பாகிஸ்தான் சர்க்கார் இறங்கிவிட்டதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானிலுள்ள பெஷாவர், குவெட்டா, பிரச்சினார், காமன் ஆகிய இடங்களிலிருக்கும் வர்த்தக ஏஜென்சிகளையெல்லாம் மூடிவிடும்படியும், அக்காரியாலயங்களில் பணியாற்றி வரும் ஆப்கன் சிப்பந்திகளை பாகிஸ்தானிலிருந்து வெளியேறிவிடும்படி கோருவதெனவும் பாகிஸ்தான் சர்க்கார் முடிவு கட்டியிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

மேலும் காண்டகார், ஜலாலாபாத் ஆகிய இடங்களிலுள்ள பாகிஸ்தான் தூதவராலயங்களையும் மூடிவிடும்படி உத்திரவிடப்பட்டுவிட்டதாம்.

"காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதவராலயத்தையும் காண்டகார், ஜலாலாபாத் ஆகிய இடங்களிலுள்ள பாகிஸ்தான் தூதவராலயக் கிளைகளையும் தாக்கியதால் ஏற்பட்ட நிலைமை எவ்வளவு தூரம் மோசமாகிவிட்டதென்பதை ஆப்கன் சர்க்காருக்கு இந்த நடவடிக்கைகளெல்லாம் உணர்த்தவில்லையானால், பாகிஸ்தான் சர்க்கார் மேலும் நடவடிக்கைகள் எடுக்கும்" என்று பாகிஸ்தான் பிரதமர் முகமதலி கூறியிருக்கிறார்.

சமரசம் செய்து வைக்கத் தலையிடுவார்?

காபூல் பாகிஸ்தான் தூதவராலயத்திலுள்ள பாகிஸ்தான் கொடி அவமரியாதை செய்யப்பட்டதையொட்டி பாகிஸ்தானிற்கும் ஆப்கானிஸ்தானத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறுகளில் சமரசம் செய்துவைப்பதாக எகிப்து பிரதமர் கர்னல் நாசர் கூறியிருக்கிறார்.

மன அமைதி பெறவா?

செய்ரோ, ஏப். 29—

பாகிஸ்தான் பிரதமரின் முதல் மனைவியான பீகம் அமீதா முகமதுஅலி, எகிப்து சென்று அங்கு ஒரு மாத காலம் தங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எகிப்திலுள்ள பெண்கள் இயக்கம் ஒன்றின் தலைவியான டாக்டர் டோரியா ஷாபிக் என்பவரின் அழைப்பிற்கிணங்கவே அங்கு அவரது விருந்தாளியாகச் செல்ல இருக்கிறாராம்.

இராசபாளையம் பாங்கி

தொழில் நடத்தத் தடை

இராசபாளையம் செண்டிரல் யூனைடெட் பாங்கி தொழில் நடத்தக்கூடாதென லைசென்ஸ் அனுமதி மறுக்கப்பட்டு, 1949-ம் ஆண்டு பாங்கிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இந்தியன் ரிசர்வ் பாங்கியினால் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

ரிசர்வ் பாங்கி, இந்த அனுமதி மறுத்திருப்பதினால், மேற்படி பாங்கி, பாங்கித் தொழில் நடத்துவதை நிறுத்த வேண்டியதாகிறது. எனவே, பொதுமக்களிடமிருந்து பங்கு டிபாசிட் தொகைகளை ஏற்றுக் கொள்ளவும் முடியாததாகிறது.

ஒரு சாண் வயிறுதானே!

இரவு காலங்களில் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டி, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்த ஐதராபாத்திலுள்ள பெண்கள் சிலர் முற்பட்டுள்ளனராம்.

சென்ற சில மாதங்களுக்கு முன்னர், இங்கு ஆண் உடையில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டி வந்த ஓர் பெண்ணை போலீசார் நிறுத்தி லைசென்சைப் பறிமுதல் செய்தது கருதத்தக்கது.

போட்டித் தொழிற் சங்கங்களிடை மோதுதல்!

மே தினத்தன்று ஏழு பேர் காயம்பட்டனர்!

நகரில் 144 தடை உத்திரவு அமுல்

மதுரை, மே 2—

இராசபாளையம் நகரில் மே தின விழாவின்போது, இரண்டு போட்டி ஆலைத் தொழிலாளர் சங்கங்களிடையே ஏற்பட்ட மோதுதலின் விளைவாக 7 பேர் காயமுற்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறக் கூடாதென 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

ஒரே சாலையின் வழியாக கம்யூனிஸ்டு தொழிற்சங்கமும், இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசும் ஊர்வலம் சென்றபோது, இந்த மோதுதல் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் நிலை அமைதியாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

'வலுவுள்ள எதிர்க் கட்சி தேவை'

ஜனநாயக அரசியல் பற்றி டாக்டர் செரியன்

சேலம், மே 2—

"ஜனநாயக முறையில் வாக்காளர்களிடம் பெரிய சக்தி இருக்கிறது; நம் மக்கள் அதிகம் படிக்காவிட்டாலும் நுண்ணிய அறிவு படைத்தவர்கள்."

இவ்வாறு சென்னை மேல் சபைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் சேலம் ரோடரி கிளப் கூட்டமொன்றில், 'ஜனநாயக அரசியல்' என்னும் தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தற்போதைய நிலையில், பார்லிமெண்டரி ஜனநாயக முறை சிறந்ததாகும்; நமக்கு ஜனநாயக முறை புதிது; பல நாள் அன்னிய ஆட்சிக்குப் பிறகு வந்துள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"இங்கிலாந்து முறைப்படி ஜனநாயக அரசியல் முறை வெற்றி பெற வேண்டுமென்றால், அரசாளும் கட்சிக்கு ஏற்ற மாற்றுக் கட்சியும் பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும்; அப்போதுதான் அரசாளும் கட்சி பதவியை விட்டுப் போனால் வேறு அரசாங்கம் ஏற்பட வழி ஏற்படும். இங்கிலாந்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு அரசாங்க மரியாதையும், சம்பளமும் உண்டு.

"பார்லிமெண்டு நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளின் செல்வாக்கு மிக அதிகம்; ஆனால், தற்போது பார்லிமெண்டில் முக்கிய சம்பவங்கள் விவாதம் நடந்தாலல்லாமல் பத்திரிகைகளில் செய்திகள் வருவதில்லை."

இலங்கை - இந்தியர் குடிஉரிமை மனுக்கள்

சில புள்ளி விபரங்கள்

இலங்கைக் குடியுரிமை கோரிச் செய்து கொள்ளப்படும் மனுக்களை நிராகரித்திருப்பது அதிகமாகியிருப்பதாக, சில புள்ளி விபரங்களிலிருந்து புலனாகிறது.

சென்ற பிப்ரவரித் திங்கள் இறுதியோடு 9,312 பேர்கள் சம்பந்தப்பட்ட 2,913 விண்ணப்பங்களை இலங்கை சர்க்கார் நிராகரித்து விட்டதாம்.

பிப்ரவரித் திங்கள் முடிவுடன் மொத்தம் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 33,002 ஆகும்.

மொத்தம் 1,25,032 மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரையிலும் இலங்கைக் குடியுரிமை கோரி 8 இலட்சத்திற்கும் அதிகமான பேர் மனுச்செய்து கொண்டுள்ளனராம்.

குறுக்கெழுத்துப் போட்டிகளின் பரிசுத் தொகை

மத்திய சர்க்கார் சட்டத்தால் குறைக்கப்படும்

குறுக்கெழுத்துப் போட்டிகளை ஒழிப்பதற்கும், அதுபற்றிய சட்டங்களை இயற்றவும், தேவையான சட்டங்களைச் செய்வது இந்திய சர்க்காரின் உரிமையா அல்லது மாநில சர்க்கார்களின் உரிமையா என்ற பிரச்சினை இப்போது எழுந்திருக்கிறதாம்.

இந்திய சர்க்கார், இதுபற்றிய சட்டமியற்ற யோசனை செய்து கொண்டிருக்கிறதாம்.

இப்பிரச்சினை பற்றி சட்டமியற்ற மாநில சர்க்காருக்கே அதிகாரம் இருப்பதாகவும், இந்திய சர்க்கார் சட்டமியற்றுவது என்றால் அரசியல் சட்டம் 252-வது பிரிவின்படி நடைபெற வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு இணங்கவே இந்திய சர்க்கார் 252-வது பிரிவின்கீழ் சட்டமியற்ற வேண்டுமென்பதால், மாநில சர்க்கார்கள் இதுபற்றிய தீர்மானங்களை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாநில சர்க்கார்களுக்கு இந்த அறிக்கையை இந்திய சர்க்கார் அனுப்பியிருக்கிறதாம்.

பம்பாய் போன்ற மாநிலங்கள் குறுக்கெழுத்துப் போட்டிகளை அடியோடு தடை செய்ய வேண்டுமென கோருகின்றனவாம். ஆனால், இந்திய சர்க்கார் இதை விரும்பவில்லையாம். குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசுத்தொகைகளைக் கட்டுப்படுத்தவே மத்திய சர்க்கார் விரும்புகிறதாம். ஆண்டுதோறும் மொத்தப் பரிசுத்தொகை ரூ 10,000 ஆக இருக்க வேண்டுமென்றும், தனிப்பட்ட மனிதனுக்கு ரூ 2,000-த்துக்குமேல் பரிசளிக்கக் கூடாது என்றும் இந்திய சர்க்கார் சட்டமியற்ற நினைக்கிறதாம்.

இம்பீரியல் பாங்கி

10,743 பங்குதாரர்கள்

புதுடில்லி, மே 3—

"இம்பீரியல் பாங்கிக்கு மொத்தம் 10,743 பங்குதாரர்கள் உள்ளனர்," என்று இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் கூறினார்.

"இவர்களில் 77.81 பேர்கள் வைத்திருக்கும் பங்குகள் ரூ 500 செலுத்தப்பட்ட பங்குகளாகவும், பகுதி செலுத்தப்பட்ட (ரூ 25) பங்குகளாகவும் இருக்கின்றன," என்று நிதி அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த பங்குதாரர்களெல்லாம் தேவையற்றவர்களென்றும் சமுதாயத்திற்காக தங்கள் பணத்தைக் கொடுத்துவிடலாம் என்று கூறுகிறார்கள் என்றும், ஆனால் இவர்களில் பெரும்பான்மையோர் விதவைகளும், மைனர்களுமாவர் என்றும் நிதி அமைச்சர் மேலும் கூறினார்.

சேலம் தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கு

★

"8—5—55 பகல் 2 மணிக்கு, சேலம் தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம், சேலம் 'ரெஸ்ட் அவுசி'ல் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டுக்கு நிதி வசூல் பற்றி ஆராயப்படும்."

["குறிப்பு :—இதுவரையிலும் தேர்தல் விவரங்களை மாவட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்காத கிளைக் கழகங்கள் விரைவில் அவற்றை அனுப்பி வைக்கக் கோருகிறேன்."]

என்று சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் பி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

தென்னாற்காடு தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கு

★

"8—5—55 பகல் 2 மணியளவில், கடலூர் திருப்பாப்புலியூர் வண்டிப்பாளையம் பாதையிலிருக்கும் 'பாரிஸ் ஹால்' கட்டிடத்தில் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். மாநில மாநாடு, மாவட்டத்தில் இயக்க வளர்ச்சி ஆகிய பொருட்கள் குறித்து ஆராயப்படும்,"

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

மே தின விழாக் கூட்டங்கள்

★

வாணியம்பாடி
வாரச்சந்தை அருகில்
7—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : முல்லைச்சத்தி
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எம். பி. வடிவேல்
எம். நடேசன்

★

இராசபாளையம்
டாக்டர் அம்பேத்கார் திடலில்
(அம்மன் பொட்டல்)
8—5—55 மாலை
பேசுவோர் :
தில்லை-வில்லாளன்
ப. க. பாண்டியன்
(அன்று மாலை 2 மணிக்கு மே தின விழா ஊர்வலமும் நடைபெறும்)

★

வேலூர் (வ. ஆ. மாவட்டம்)
8—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

★

குடந்தை
வெள்ளி விழா பூங்காவில்
8—5—55 ஞாயிறு மாலை
தலைவர் : சு. பத்மநாபன்
பேசுவோர் :
குடந்தை எஸ். ஆர். ராதா
பூங்கோதை
அருண்மொழி

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

★

மே 4 முகவூர் (இராசபாளையம்)
6 ஆனமலை
8 வேலூர்
9 மருதவல்லிப்பாளையம்
10 சந்தைப்புதுப்பாளையம்

பலருக்கு வேலையில்லாமற் செய்யும் தொழிற் சிக்கன ஏற்பாடு

பஞ்சாலைகளில் அமுல் செய்யப்பட மாட்டாதாம்

அமைச்சர்கள் தரும் உறுதிமொழி

புதுடில்லி, மே 2—

"பல தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமற் போகச் செய்யும் தொழில் சிக்கன ஏற்பாட்டை பஞ்சாலைகளில் அமுல் நடத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம்,"

என்று மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரியும், வாத்தக மந்திரியும் உறுதிமொழி தந்துள்ளனராம்.

பஞ்சாலைகளில் தொழிற்சிக்கன முறை கடுமையாகப் பின்பற்றப்பட்டதால் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருப்பதாயும், தொழிலாளரிடையே வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்திருப்பதாயும், இந்த நிலையை விவாதிப்பதற்காக அவசரப் பிரரேபணைகொண்டுவரப்பட்டிருப்பதாயும் கூறி, எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஏ. கே. கோபாலன் கொண்டுவந்த அவசரப் பிரரேபணை நிராகரிக்கப்பட்டது.

கான்பூர் பஞ்சாலைத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்திலீடுபடப்போவதாக அச்சுறுத்தியிருப்பதாயும், அவர்கள் 'டிரிபியூனல்' தீர்ப்புக்குக் கட்டுப்பட தயாராக இருப்பதாயும் கோபாலன் கூறியிருக்கிறார்.

"உள்நாட்டு தொழில் மந்திரிகள், மேலும் விபரங்கள் சேகரித்து அறிக்கை வெளியிடும் வரை அவசரப் பிரரேபணையை விவாதிக்க வேண்டியதில்லை," என்று சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

"தொழிற் சிக்கன முறையால் பலருக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படுமானால், அந்த ஏற்பாட்டை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் நிச்சயமாக அனுமதிக்கமாட்டார்கள்,"

என்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

உறுப்பினர்கள் கருதுவது போல, தொழிற் சிக்கன முறை பஞ்சாலைகளில் அமுல் செய்யப்படமாட்டாது என்றும், தொழிலாளர்களைக் குறைக்கும் ஏற்பாடாக அது இருக்காது என்றும் வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் உறுதியளித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

புரட்சி மனம்கொண்ட

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சியபூர், அங்கோரிக்கையில் மறைந்திருக்கும் சமதர்மப் போக்குர், அக்கருத்தினருக்குச் சுலபமாகப் புரியக் கூடும்.

"புரட்சி, வெறும் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்தும், அதை ஒழித்துக் கட்டவுமட்டுமே ஏற்பட்டுவிடுவதில்லை. இழந்த தன்மானத்தையும், தனி மனிதச் சுதந்திரத்தையும் மீண்டும் பெறவும், அதை மக்களிடமிருந்து படை பலத்தாலும் சூழ்மதியாலும் பறித்துக்கொண்டு, அதை மறுபடியும் மக்கள் பெறவிடாமல் தடுத்துவரும் கொடுங்கோலாட்சியை வீழ்த்தவும் புரட்சி ஏற்பட்டே தீரும். உலக வரலாறு இதற்கு சாட்சியம். எனவே, தனது உரிமை இன்னது என உணர்ந்து, முதல் முதலாக அச்சத்தை விடுத்து அமெரிக்க பாட்டாளிகள், தங்கள் உரிமையைப் பெறுவதற்காக, ஆளவந்தார்களை எதிர்க்கத் துணிந்த இம் மே தினத்தில், திராவிட இன விடுதலையைக் கோரும் நமது தி. மு. கழகம் பங்கு கொள்வது மிக மிகப் பொருத்தமானதேயாகும்.

"விடுதலை, எத்துறையில் கோருவதாக இருந்தாலும், நாம் விழைகிறோம்—கோருகிறோம் என்பதற்காக மட்டும் கிடைத்துவிடக்கூடியதல்ல; அதற்குரிய விலையைக் கொடுத்த பின்னர்தான், அவ்விடுதலை கிடைக்கக் கூடியதாகும்.

"குறிப்பிட்ட ஒரு முதலாளிக்கும்—ஒரு தொழிலாளிக்குமுள்ள பலத்திற்கும் பலக்குறைவுக்கும் அவரவர்களிடம் உள்ள வசதிகளே முக்கியக் காரணங்களாகும். அவ்வசதிகளில் மாற்றம் செய்யப்படுமானால், இரு சாராரும் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு, அசசதுடன் வாழவேண்டிய கட்டாயம் இருக்காது.

"நல்வாழ்வு பெறும் போக்கிலும், நோக்கிலும் மாறுபாடு இருந்த போதிலும், எலியும் - பூனையும் போன்றும், கீரியும் - பாம்பும் போன்றும், முதலாளியும் - தொழிலாளியும் ஒருவரை ஒருவர் காண நேர்ந்தவுடனே, கொன்று தீர்த்துவிடும் குணமும் இல்லை—பகைத்து வாழும் நிலைமையும் இல்லை. அந்நிலை இருந்திருக்குமானால், மனித சமூகம் தோன்றிய அந்த நிமிடமே செத்து மடிந்து போயிருக்கும்.

"குறைந்த உழைப்பும், தேவையான அளவு வசதியும் ஒவ்வொருவரும் பெற்றாக வேண்டும். அதற்குத் தேவைப்படும் மன நிலையை ஒவ்வொருவரிடமும் உண்டாக்கவும், அதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும்தான் தனது கடமை என தி.மு.க. கருதுகிறது. அதன் விளைவாகத்தான் பட்டிதொட்டிகளிலெல்லாம், இம் மே தின விழாவை நமது கழகம் கொண்டாட முன்வந்து இருக்கிறது என குறிப்பிடுவது மிகையாகாது."

டாக்காவில் புயல்

டாக்கா, மே. 2—

டாக்கா நகரில் நேற்று மாலை 80 மைல் வேகத்தில் அடித்த சூறாவளியினால் ஏராளமான உயிர்களுக்கும், பொருளுக்கும் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பூரி நகரில் கங்கை நதியில் நீராவிப் படகு ஒன்று கவிழ்ந்ததில் 50 பேர் மூழ்கி இறந்துவிட்டதாக அஞ்சப்படுவதுடன் மேலும் நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

100 பேருக்கு மேல் காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மரங்கள் வேருடன் சாய்ந்ததினாலும், தந்தி, டெலிபோன் கம்பங்கள் முறிந்து விழுந்ததினாலும் போக்குவரத்துக்கள் தடைபட்டதுடன், இரவு முழுதும் நகரில் இருள் சூழ்ந்திருந்ததாம்.

தீயணைக்கும் படையினரும், போலீசாரும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் ஈடுபட்டிருந்தனர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு மிகப் பெரிய சூறாவளி இதுதான் என்று கூறப்படுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

4—5—55 மாலை 6 மணியளவில், சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தோழர் பெருமாள் தலைமையில் நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'உலக மேதைகள்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.